முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2023) மதுரையில், பல்வேறு சமூக நலப் பணிகளை ஆற்றி வரும் மதுரை தத்தநேரியைச் சேர்ந்த சுயதொழில் புரிந்து வரும் ராஜேந்திரன் அவர்களை அழைத்து சிறப்பித்து, மதுரை மாநகராட்சி, திரு.வி.க. மேல்நிலைப் பள்ளிக்கு 10 வகுப்பறைகள், இறைவணக்க கூட்ட அரங்கம், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றை 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து தந்தமைக்காகவும், இந்த ஆண்டு மதுரை மாநகராட்சி, கைலாசபுரம் ஆரம்பப் பள்ளியில் 4 வகுப்பறைகள், ஒரு ஆழ்துளை கிணறு, உணவு அருந்தும் இடம், கழிப்பறைகள் ஆகியவற்றை 71 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்து தந்தமைக்காகவும், மேலும் பல்வேறு சமூக பணிகளை மேற்கொண்டு வருவதற்காகவும் தனது வாழ்த்துகளை தெரிவித்து, சால்வை அணிவித்து, அவருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை வழங்கி பாராட்டினார்.

சென்னையில் கனமழை!

சென்னை, ஆக. 19- வளிமண்டல கீழடுக்கு சுழற்சியால் தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் லேசான முதல் மிதமான கனமழை பெய்து வருகிறது. இதற்கிடையே, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்திருந்தது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய 9 மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் காந்தி பள்ளி அருகில் பேருந்து நிறுத்தத்திற்கு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அடிக்கல் நாட்டினார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், துணைச் செயலாளர் டி. என். முருகன், ஒன்றியச் செயலாளர் பி. வி. ஆர். விசுவநாதன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் 90வது பிறந்த நாள்! திருக்குவளையில்

கலைஞர் இல்லத்தில் உள்ள முரசொலி மாறன் சிலைக்கு மரியாதை!

என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

நாகை. ஆக.19- முத்தமிழ்அறிஞர் கலைஞர் அவர்களின் மனச்சாட்சியாக விளங்கியவரும், திராவிட முன்னேற்ற கழகத்தின் மூளையாகச் யெல்பட்டவரும், ஒன்றிய அமைச்சராக இருந்து இந்தியாவை உலக அரங்கில் உயர்த்தி காட்டி அனைவருடைய பாராட்டுதல்களை பெற்று மிகச் சிறப்பாக பணியாற்றியவருமாகிய முரசொலிமாறன் அவர்களின் 90 வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னை அஞ்சுகம் அறக்கட்டளை ஏற்பாட்டில் அவர் பிறந்த வீடான நாகை மாவட்டம் திருக்குவளையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள முரசொலி மாறன் திருவுருவச் சிலைக்கு நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், க.ராஜேந்திரன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர்மணி வண்ணன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கீழையூர் கிழக்கு ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், கீழையூர் மேற்கு சோ.பா.மலர்வண்ணன், தலைஞாயிறு மகா.குமார்,. கீழ்வேளூர் தெற்கு கே.பழனியப்பன், நாகை வடக்கு சிக்கல் என்.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், கோசி. குமார், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், தலைஞாயிறு ஒன்றியக் குழு தலைவர் ஆர். ஜி.தமிழரசி, தகவல் தொழில் நுட்ப அணி நாகை மாவட்ட துணை ஒருங்கணிப்பாளர் எஸ்.செல்வா, நாகைதெற்குஒன்றியதுணைச் செயலாளர் திருநாவு கரசு, மாவட்டப் பிரதிநிதி சி.வீரமணி, திருக்குவளை கிளை நிர்வாகிகள் பி.தியாகராஜன், கந்தன், வீரக்குமார், தியாகராஜன், தகவல் தொழில் நுட்ப அணி பாலாஜி மற்றும் பாஸ்கர், கலைஞர் இல்ல காப்பாளர் தியாகராஜன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

திருச்சியில் ரூ.72.41 லட்சம் மதிப்பீட்டில் 'எகார்ட்' வாகனங்களின் சேவை!

அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைத்தார்

திருச்சி, ஆக.19- திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் 29 ஊராட்சி மன்ற அலுவலகங்களுக்கு ரூபாய். 72.41 லட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்ட ECARD வாகனங்களின் சேவையை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கொடியசைத்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்...

இதனைத் தொடர்ந்து திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம் காணக்கிளியநல்லூரில் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 23.56 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்தார்.

தொடர்ந்து அதே பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூபாய் 10.19 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்து குழந்தைகளுக்கு முன் பருவ கல்வி பெட்டகங்களை வழங்கினார்.

தருமபுரி மேற்கு மாவட்டம் வத்தல்மலை சாலை வாசுதேவன் நகரில் வரவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்றிட ஏதுவாக கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் கே.பி.சக்திவேல் ஏற்பாட்டில், மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் புதிய கிழக்கு ஒன்றிய தி.மு.க.செயலகத்தை திறந்து வைத்து,BLA 2 கழக முகவர்கள் கூட்டத்தில் முகவர்கள் ஆற்றிய பணிகளை ஆய்வு செய்தார்.உடன் அவைத்தலைவர் கே.மனோகரன்,மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அ.சத்தியமூர்த்தி,தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன்,ஒன்றிய செயலாளர்கள் ஏ.எஸ்.சண்முகம்,கே.எஸ்.ஆர்.சேட்டு,என்.ஏ.மாது, இந்து சமய அறநிலையத்துறை மாவட்ட தலைவர் பி.கௌதமன்,பொதுக்குழு உறுப்பினர் பி.லட்சுமணன்,ஒன்றிய அவைத்தலைவர் பி.ஜி.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட கழகத்தினர் கலந்துகொண்டனர்

சமூகப் பணியாற்றிடும்

மதுரை இராஜேந்திரனுக்கு பாராட்டுகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 19- சமூகப் பணியாற்றிடும் மதுரையைச் சேர்ந்த இராஜேந்திரன் அவர்களைப் பாராட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பாசத்துக்குப் பெயர் போன மதுரையில் பாசமிகு பெரியவர் தத்தநேரி இராஜேந்திரன் அவர்களைச் சந்தித்தேன். ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்திருந்தாலும், அடுத்தடுத்த தலைமுறைகளில் படித்திட வேண்டும் என்ற முனைப்போடு அவர் ஆற்றும் கல்விப் பணிகள் இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு மதுரை மக்களால் பேசப்படும் என்பது உறுதி.

அவர் போன்ற மனிதர்களோடு உறவாடும் நேரங்களில் காலம் சற்றே உறைந்து நிற்காதா!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.